**மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்**

2012 ஒக்டோபர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

**நிகழ்ச்சி நிரல்**

I. **தவிசாளரின் அறிவிப்புகள்**

II. **அறிக்கைகளையும் , ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

01. **கௌரவ ஏ.எம்.யூசுப் உறுப்பினரினால் கௌரவ போக்குவரத்து, விளையாட்டு இளைஞர் விவகாரம் கலை கலாச்சார நடவடிக்கை , கூட்டுறவு அபிவிருத்தி கிராம அபிவிருத்தி விடயப் பொறுப்பு அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/v(01) / 12/ 21)**

(அ) பயாஹல வடிசாலைக்குரிய கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதய நிர்வாகம் கூட்டுறவு ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையினாலா,அல்லாவிடின் கூட்டுறவு அங்கத்தவர்களிலிருந்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையினாலா நிர்வகிக்கப்படுகின்றது ?

(ஆ) அதன் தவிசாளர் யார் ?

(இ) இந்த கூட்டுறவுச் சங்கத்»திற்கு “கள்” இனை வழங்குபவர்கள் யார் ?

(ஈ) அவ் வழங்கலாளர்களின் எண்ணிக்கை எத்தனை ?

(உ) அவர்களின் பெயர்களையும் முகவரியினையும் சபைக்குச் சமர்ப்பிப்பீர்களா?

(ஊ) மாதத்திற்கு எத்தினை லீட்டர் “கள்” சங்கத்திற்கு கிடைக்கப் பெறுகின்றது ?

(எ) ஒரு லீட்டர் “கள்” க்கு செலுத்தப்படும் நிதி எவ்வளவு ?

(ஏ) கிடைக்கப்பெறும் “கள்” இல் இருந்து எவ்வளவு ஸ்பிறீட் அல்லது மதுசாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது ?

02. **கௌரவ நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மற்றும் மின்சக்தி, மின்வலு வியாபார விடயப் பொறுப்பு அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/v(01) / 12/ 22)**

அ " மினிஸ்றி ஒப் கிறப் " என்ற பெயரில் கொழும்பு நகரத்தில் வியாபாரம் ஒன்»று (றெஸ்»ருறண்ட்) பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ அவ் வியாபாரத்திற்கு மேல் மாகாணத்தின் வியாபாரப் பெயர் பதிவுத் திணைக்களத்தின் கீழ் பெயர் பதிவு வழங்கப்பட்டுள்ளதா?

இ. "மினிஸ்றிஒப்" என்ற சொற்கள் வியாபாரம் ஒன்றை பதிவு செய்ய உபயோகிக்க முடியாத சொற்கள் என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றீர்களா?

ஈ. பதிவு செய்யப்படவில்லையாயின் அவ் வியாபாரப் பெயரின்» கீழ் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்வது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது?

03. **கௌரவ நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மற்றும் மின்சக்தி, மின்வலு வியாபார விடயப் பொறுப்பு அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/v(01) / 12/ 23)**

அ. 2010 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தின் வியாபாரப் புரள்வு வரி (B.T.T) வருமானம் எவ்வளவு?

ஆ. 2011 ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்ட B.T.T வரி வருமானத்திற்காக இவ் மாகாண சபைக்கு கிடைக்கப்பெறும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி N.B.T மூலம் சென்ற செப்டெம்பர் 31 ஆந் திகதி அளவில் கிடைக்கப்பெற்ற வருமானம் எவ்வளவு?

இ. 2011 ஆம் ஆண்டிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியில் எதிர்பார்க்கப்படும் வருமானமாக வரவு செலவுத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

ஈ. மிகுதி நிதியினை அறவிட்டுக்கொள்ள எடுக்கும் நடவடிக்கை யாது?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புகளும் / அமைச்சர்களின் தகவல்களும்

## VIII தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## *IX* சபைக் கூட்டம்

*கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் முன்வைக்கப்படுவதற்கு*

பிரேரணை

"2013 ஆம் ஆண்டு நிதிக்கூற்று தொடர்பான விவாதம் மற்றும் அது தொடர்பாக ஒதுக்கப்பட்ட தினங்கள் சம்பந்தமாக இதற்கு முன்னர் எவ்வாறான தீர்மானங்கள் எடுத்திருந்த போதும் அவை எவற்றினையும் கருத்தில் கொள்ளாது 2012.10.10 ஆந் திகதி நடை பெற்ற சபை நடவடிக்கை செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இணக்கத்தைக் கருத்தில் கொண்டு 2012 டிசம்பர் 05, 06, 07, மற்றும் 10 ஆந் திகதிகள்" **"2013 ஆம் ஆண்டில் நிதிக்கூற்று தொடர்பான விவாதம் மற்றும் அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட தினங்களாக வேண்டும்"** எனக் கருதிச் செயற்பட வேண்டும்."

## *X* சபையின் நடவடிக்கை

*கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் முன்வைக்கப்படுவதற்கு*

*பிரேரணை*

*"இன்றய தினம் பொது நடவடிக்கை முன்னுரிமை பெறவேண்டும்"*

## *XI தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கை*

01. கௌரவ ரோஸ் பெர்னாண்டோ உறுப்பினர் அவர்கள்

"மேல் மாகாண சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் வாய்க்கால், கால்வாய், கான்தொகுதி வீதிகள் மற்றும் அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள எல்லைகளை உரிய முறையில் காட்டும் வரைபடம் ஒன்றைத் தயாரித்து வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடுவது இதுவரை மேற்கொள்ளப்படாதபடியால் அங்கீகாரமற்ற நிரப்பு நடவடிக்கை மற்றும் அங்கீகாரமற்ற நிர்மாணங்களைத் தடுப்பதற்கும், வெள்ளத்தினால் ஏற்படும் எச்சரிக்கை, டெங்கு போன்றவற்றினால் ஏற்படும் பொது பாதிப்புக்களின் பாதும் கூட உள்ளூராட்சித் தாபனங்களுக்கு சட்டரீதியாக செயற்பட முடியாத நிலை ஒன்று தோன்றி உள்ளது. எனவே இந்த மாகாண சபையின் அதிகார பிரதேசங்களுள் காணப்படும் எல்லா கால்வாய், ஏரி, கான் அமைப்பு, வீதிகள் மற்றும் அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள எல்லைகளை உள்ளூராட்சித் தாபனங்களின் மூலம் உரிய முறையில் இனங்கண்டு உரிய வரைபடம் ஒன்றைத் தயாரித்து அவற்றை வர்த்தமானியில் வெளியிட்டு எதிர்காலத்தில் உள்ளூராட்சித் தாபனங்கள் முகம் கொடுக்கக்கூடிய சட்டரீதியான பிரச்சினைகளைக் குறைப்பதற்கும், அங்கீகாரமற்ற கட்டட நிர்மாணம், காணி

நிரப்பு, குடியிருப்பு போன்றவற்றைக் குறைத்து பொது மக்களுக்கு விரிவான சேவை ஒன்றினை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேல் மாகாண மாகாண சபை அரசிடம் பிரேரணை தெரிவிக்கின்றது. " (பி/v(01) / 12 / 12)

02. கௌரவ சலோஜன கமஹே உறுப்பினர் அவர்கள்

"மேல் மாகாணத்தினுள் கடைகள், ஹோட்டலகள் மற்றும் விற்பனைச் சாலைகளில் பல இலட்சக்கணக்கான ஊழியர்கள் வேலை செய்வதுடன், அவ்வூழியர்களுக்கு முறையான சம்பளம், ஊழியலாப நிதி, பணிக்கொடை, விடுமுறை, மேலதிக நேரக் கொடுப்பனவு என்பன ஒழுங்கான முறையில் கிடைக்கப் பெறாதபடியால் அந்த ஊழியர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொடுக்கவும், ஆகக் குறைந்த சம்பளத்தைத் தீர்மானித்தல் உள்ளிட்ட அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சிபார்சினைப் பெற்றுக்கொள்ள குழு ஒன்றினை நியமிக்க வேண்டுமெனவும், அச் சிபார்சுகளுக்கு இணங்க தீர்வினைப் பெற்றுக் கொடுக்க செயற்பட வேண்டுமென இந்த மேல் மாகாண மாகாண சபை அரச தொழில் அமைச்சுக்»கு பிரேரணை தெரிவிக்கின்றது."

(பி/v(01) / 12 / 13)

## XII பொது நடவடிக்கை

01 **கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூகநலன்புரி, மகளிர் விவகார, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சபை நடவடிக்கை அமைச்சர் (மே.மா)**

**2012 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது சுகாதார தீங்குகளைத் தடுக்கும்**
**<u>நியதிச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட விதிகள்</u>**

2012 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது சுகாதார தீங்குகளைத் தடுக்கும் நியதிச்சட்டத்தின் 21 ஆவது பிரிவின்கீழ் மேல் மாகாணத்தின் சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூகநலன்புரி, மகளிர் விவகார, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சபை நடவடிக்கை அமைச்சராகிய எனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட,

"2012 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது சுகாதார தீங்குகளைத் தடுக்கும் விதிகள்" என்ற பெயர் கொண்ட விதிகள்

2012 ஆகஸ்ட் 16 ஆந் திகதி 1771/23 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் (அதிவிசேடம்) IV(அ) பிரிவு - (மாகாண சபைகள்) மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன் அவ்விதிகளை குறித்த நியதிச்சட்டத்தின் 21(3) உப பிரிவுக்கு இணங்க அங்கீகாரத்திற்காக மேல் மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

## XIII சபை ஒத்திவைப்பு பிரேரணை

கே.எச்.டி.கே சமரக்கோன்
செயலாளர்,

மேல்மாகாண மாகாண
சபை

2012.10.10 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.